




ஓலை 152| ஓசை 275| டிசம்பர் 2025

# அகர முதல இலக்கியப் பேரவை



‘தனித்தமிழ்த் தந்தை’ மறைமலை அடிகள்

## கவிதை வார இதழ்

தமிழ்ப்பணியில...

அகர முதல இலக்கியப் பேரவை [ ம ] சிவம் அறக்கட்டளை

# திருக்குறள்

## குறள்

**தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்**
**கொள்வர் பயன்தெரி வார்**

## பொருள்

**தினை அளவாக மிகச் சிறிய உதவியே செய்யப்பெற்றிருந்தாலும்**
**உதவியின் பயனை நன்கு அறிந்தவர்**
**அதைப் பனை அளவு மிகப் பெரிய உதவியாய்க் கருதுவர்**


அகர முதல இலக்கியப் பேரவையில் இணைய

9597887847

அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

## நிறுவனர்

**செல்வமுத்துகுமரன் குணசேகரசிவம்**

## ஆசிரியர்கள்

**அ.வில்சன்**
**குமர.தர்மசீலன்**

## வடிவமைப்பு

**ச.சூர்யா, அ.வில்சன்**

## அலுவலக முகவரி


97, குஞ்சிதபாதம் நகர்,
டவுன்ஸ்டேஷன் தென்புறம்,
மயிலாடுதுறை-609001.


# அகர முதல இலக்கியப் பேரவை


Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

## முற்பகற் செய்யின் பிற்பகல் விளையும்!

பாவகை : குறள் வெண்பா




மரபாடை நெய்ததோன் மாத்தமிழ்க் கீந்தால்
மரபே விளையும்பின் மாண்பு,

கரந்தால் தமிழ்ப்பாலைக் காலமெல்லாம் பின்னால்
சுரந்திடும்; எண்ணித் துணி.

உரிமைக்கு நின்றுமே உன்குரல் தந்தால்
பெரிதாய் விளையுமே பின்.

கார்முகில் முன்னால் கனிந்துரு வானாவே
நீர்மழையில் நீந்தும் நிலம்.

எரிமலை முன்னால் எரிந்தாலே பின்னால்
எரிந்தசாம்பல் மிஞ்சுவ தேது!

காலைப் பரிதியாய்க் கண்விழித்தால் பாரில்பின்
சோலையாகும் சிந்தித்துச் சொல்.

நல்லெனச் செய்திட நல்லெனச் சூழ்ந்திடும்;
பொல்லாமை போக்கிடு போ!




### இலக்கணக் குறிப்பு:

ஓரடி நான்கு சீர்கள், அடுத்தடி மூன்று சீர்கள் வரும். இரண்டடிக்கும் ஒரெதுகை வைத்து எழுதுதல் சிறப்பு. அடி தோறும் முதல் சீரிலும் மூன்றாம் சீரிலும் பொழிப்பு மோனை அமைதல் வேண்டும். சீருக்குச் சீர் வெண்டளை பிறழாமல் காய் முன் நேர், நேர் முன் நிரை, நிரை முன் நேர் என்ற தளை அமையும். வெண்சீர் வெண்டளையும் இயற்சீர் வெண்டளையும் வந்து செப்பலோசை அமைய வேண்டும். பாட்டின் ஈற்றுச்சீர் நாள், மலர், காசு, பிறப்பு என்ற வாய்பாட்டில்,கு,சு,டு, து, பு, று என்னும் உகர ஓசையில் முடிதல் வேண்டும். சீருக்குச் சீர் குற்றியலுகரம் நோக்க வேண்டும் குறள் வெண்பாவில் இரண்டே அடி என்பதால் நேரிசை, இன்னிசை வாரா.

பாவகை : பஃறொடை வெண்பா

உண்ணும் உணவால் உடலும் உரமாகப்
பண்ணும் குருதிப் பதமாக ஓடினால்
மண்ணில் உழைக்கலாம் மாண்புடன் வாழலாம்
வண்ணமாய் நாமும் வாழ்வோர்க் குதவுவோம்
எண்ண அலையாலே ஏற்றம் மிகுந்திடக்
கண்ணாய் நினைத்தே களிப்புடன் நாமே
குருதி இழந்தே குலைந்தோர் தமக்கே
கருத்தாய் உதவி கடமையை ஆற்ற
மருந்தாக ஈதலே மாண்பு.



கவிஞர் செ. கலைவாணி

# அன்பு கசக்கும்

உயிர்ப்பில்லா உள்ளத்தில் உயிர்விதையாய் அன்பை
உளமாற தூவியபின் உருவாகும் பிணைப்பு
பயிரிட்ட விதையதுவும் பாசத்தில் செழித்து
படுவிரைவாய் வளர்ந்தபின்தான் பரிதவிக்கும் மனது
வியக்கின்றேன் அன்பிற்கும் விதியுண்டு; மீற
விலக்கிவைக்கும் ஒதுக்கிவைக்கும் விளைந்தன்பும் கசக்கும்
இயல்புவாழ்க்கை ஒருபோதும் இயங்காதே இயல்பாய்
இதயத்துள் வலிமூண்டு இம்சிக்கும் பழியாய்



கவிஞர் பூர்ணிமா சங்கர்

# விரிந்த நட்பு வட்டம்



பக்கத்துக் கடைக்கு
அடிக்கடி வரும்
அந்தப் பையன்
நானெழுதுவதை
பார்த்துக் கொண்டிருப்பான்.

பக்கத்துக் கடை
வாலிபர்களுக்கு
பையன் உறவுக்காரன்.
அவர்களுக்கு
தேநீர் வாங்கி வருவது
வழக்கம் அவனுக்கு.

அவன் போகும் போது
தம்பி எனக்கொன்று என்பேன்.
அவன் மனநிலைப் பொருத்தே
நான்கில் ஒரு முறை
தேநீர் வருமெனக்கு.

மீதிச்சில்லரை
இரண்டு ரூபாயை
ஒரு நாள்
எடுத்துக்கொள்ளச் சொன்னது
முதல்
என் மீது கரிசனம் அவனுக்கு.

இப்போதெல்லாம்
நான் சொல்லாமலே எனக்கும்
தேநீர் வாங்கி வருகிறான்.

பத்துரூபாயை
கொடுப்பதோடு சரி.
மீதிச் சில்லரையை
நான் கேட்காததிலும்
அவன் கொடுக்காததிலும்
எங்களுக்குள்ளான நட்பு
விரிந்து கொண்டிருக்கிறது.

கவிஞர் பாரியன்பன் நாகராஜன், குடியாத்தம்

# காதல் நதி



நித்திரையில் மட்டும் வந்த கனவல்ல
நிஜத்திலும் நிலையாய் தொடரும்
கனவே கானலான காதல் உணர்வு.

வெறுமனே உணர்வல்ல
மகிழ்வாயிருப்பவனை சோர்வாகவும்
சோர்வாயிருப்பவனை மகிழ்வாகவும்
ஒரு நொடிக்குள் மாற்றிடும்
மாயாஜாலம் நிறைந்த கனவு அது.

கண்களின் இமைகளை திறக்கும்
ஒவ்வொரு வினாடியிலும்
காலத்தையே நிற்க வைத்திடும் அற்புதமது.

வார்த்தைகள் பறிமாறாமலே
ஆயிரம் அர்த்தங்களை உணர்த்திடும்
மௌன மொழி அது.

பூக்கள் பூக்கும் தருணங்களும்
புயல் வீசும் தருணங்களும்
மழையும் வெயிலும் போல
தொடராய் நிகழ்ந்திடும்.

இதமான நதியாய் இருக்கலாம்
எப்போது வெள்ளமாய் மாறுமென
கூற முடியுமா?

அது போன்றே காதல் என்ற நதி
எப்போது கானலாகும்
அதன் முடிவு நிஜமா? கானலா? யார் அறிவர்

விடையறியா விடியலாய்
அது விதியின் கரங்களில் தங்கியிருக்கிறது.

நிஜத்தில் கானலானாலும் நினைவில் நிஜமாய்
காதல் என்ற நதி மனதில் என்றும்
நிலைத்திருக்கும் நீடித்திடும் நினைவலைகளாய்.

கவிஞர் ரஸ்னா ரம்ஸான், கண்டி, அக்குறணை

# செய்ந்நன்றி அறிதல்

தானுதவி செய்யாதிருக்கும்போதே பிறர் நமக்குச் செய்யும் உதவிக்கு நிகராக
வானுலகையும் மண்ணுலகையும் கொடுத்தாலும் ஈடாகா

துன்ப காலத்தில் ஒருவனுக்கு செய்த உதவி சிறிதே ஆயினும்
அன்றைய காலத்தில் பயனை நோக்கினால் புவியினும் பெரிதாமே

கிடைக்கும் பயனைக் கருதாது ஒருவர் செய்த உதவி உரித்தே
மடைதிறந்த வெள்ளமாய் நீரைக் கொண்டிருக்கும் கடலினும் பெரிதே

தினையளவு உதவி ஒருவன் செய்திடினும்
பனையாய் கருதி மகிழ்வாரே பயன் தெரிவார்

ஒருவன் செய்யும் உதவியின் அளவு மதிப்பால் வருவதல்ல
செய்யப்பட்டாரின் பண்பால் உயர்கிறதே


துன்பத்தில் உதவியோரின் நட்பைத் துறவாதீர்
அன்போடு அறிவுரை தரும் குற்றமற்றவரை மறவாதீர்

எழுந்த துன்பத்தை நீக்கிய ஒருவரின் நட்பை தொடர்பவர் நல்லவரே
எழுபிறப்பிலும் மறவாமைப் பண்பால் ஆவார் வல்லவரே

பிறர் செய்த நன்மையை என்றும் மறவாதே
அறமின்றி செய்த தீமையை ஒருபோதும் நினையாதே

நன்மை புரிந்தவனே கொலை நிகர்த்த தீமை புரியினும்
நன்றான ஒன்றை நினைத்து தீமையை விலக்குவீர்

அறத்தை அழித்தோர்க்கும் உய்யும் வழி கொண்டீர்
புறத்தே நன்றி மறந்தோர்க்கு உய்யும் வழியில்லை கண்டீர்



கவிஞர் குரு. ஜெயந்தி, சிதம்பரம்

# ஊடல்

அன்பே, ஆருயிரே, என் இதய ராணியே
இம்மாளிகையின் கானகத்து குயிலே
ஏன் ஊடல் கொண்டு இங்கே வந்து
சோகம் கொண்டு விட்டாய்?

நீங்கள் மன்னர், உங்களுக்கு ஆயிரம்
அரசவை பணிகள் இருக்கும்.
எம்மை நினைக்க எங்கே நேர்மிருக்கும்?

என் நெஞ்சில் குடிகொண்ட பூங்காவனமே!
உன்னை நினைக்காத நொடிப்பொழுதுகள்
இருப்பின் என் இதயம்
சுவாசம் நின்று விடாதோ?

உனக்காக இப்பாலை மண்ணிலே
பாபிலோனிய தொங்கும் தோட்டம் அமைத்தேனே.
கண் அசைத்துக காட்டிடேன்
வானத்து நிலவை உன் காலடியில் வந்து நின்று
சேவகம் செய்யச் சொல்கிறேன்

என் இதயத்தினை ஆளும் அரசனே
எனக்கென்று தாங்கள் வேளை ஒதுக்காததுதான்
இந்த ஏந்திளையாளின் வருத்தமே.

ஓ ! இதுதான் என் தேவதையின் ஊடலுக்கு காரணமோ?
மந்திரியாரே, என் இதயத்தின்
அரசியின் விருப்பத்தை நிறைவேற்ற
என் மற்ற பணிகளையெல்லாம்
உடனே ஒதுக்கி வையுங்கள்

போங்கள் எல்லாம் உங்களுக்கு விளையாட்டுத்தான்
ஆஆஆஆஆ என்வானத்து மங்கையின் இதழ்களில்
சிரிப்பு மலர்ந்து விட்டதே.



கவிஞர் இராஜகை நிலவன், மும்பை

பருவம் வந்ததும்
பாவையை தேடுது கண்கள்!
கண்கள் கண்டதை
கவிதை எழுதியது கைகள்!
எதை தர என்னவளிடம்
என்னையே தருகிறேன்,
ஏற்றுக்கொள்வாளா?



கவிஞர் ரீ. சூர்யா, கொழும்பு

# கண்மணி



கோதிலாக் காதலைக்
கொள்வாயே கண்மணி
காந்தமாய் ஈர்த்திட்ட
கார்குழல் தேவதையே

கானமிசைத்திட்ட இளங்குயில்
காரிகையே வாராயோ
காத்திருந்த தருணமெல்லாம்
கன்னியுன் நினைவுகளே

வஞ்சமில்லாப் புன்னகையில்
வசியமானேன் அன்பே
தஞ்சமானேன் அன்னமே
தளிருடல் மேனியாளே

சிற்றிடை அசைவினில்
சிதறுண்டேன் நானே
எண்ணமது சிறகடிக்க
என்னுள் ஆனந்தமே

விழிகளின் மொழிகளில்
வியப்பூட்டிய நங்கையே
நளினமான நர்த்தகியே
நாணத்தில் வீழ்ந்தாயோ

மயக்கியப் பேரழகியே
மாற்றமது என்னிடமே
என்னுள் புகுந்து
எண்ணமதில் நிறைந்தாயே

கோதில்லாக் காதலைக்
கொள்வாயே கண்மணி
இல்லறத்தில் இணைந்தே
இனிமைதனைக் காண்போம்

உறவினில் கலந்தே
உணர்வாகிக் திளைப்போம்
உரியவள் நீதான்
உயிரான பந்தமே

ஐக்கியமான வாழ்வினில்
ஐயமது விலகட்டுமே

கவிஞர் பெ. வெங்கட லட்சுமி காந்தன், விருதுநகர்

மனம் மாறி வருவாயென
மழை நனைத்த சாலையில்
காத்திருக்கும் விழிகள்.

கசப்புகள் கரைந்து
கனிந்த உள்ளம்.
காலம் தந்த மாற்றம்
காத்திருக்கும் விழிகள்.



கவிஞர் செ. தமிழ்நேயன், தமிழ்நாடு

# என்னவென்று சொல்வேன்



என்னவென்று சொல்வேன்
அவள் என்ன செய்து கொண்டிருப்பாள் என்று
மேகத்தை தூது அனுப்பினேன்.
வெகு நேரமாகியும் சென்ற
மேகம் திரும்பவேயில்லை

அவள் அழகில் மயங்கி அங்கேயே தங்கிவிட்டதோ?
அல்லது அவளின் இனிய குரலால் கூறும்
கதைகளைக் கேட்டு கரைந்துவிட்டதோ?

என் மனதின் ஏக்கங்களைச் சுமந்து சென்ற மேகம்,
அவளின் வாசலில் ஒரு துளி மழையாகப் பொழிந்து,
என் காதலை அவளுக்கு உணர்த்திவிட்டதோ?

அவள் கூந்தலில் விழுந்து, ஒரு முத்துப்போல்
மின்னிய அந்த மழைத்துளி,
என் இதயத்தின் துடிப்பை
அவளுக்குச் சொல்லியதோ?

அவளின் கன்னத்தில் வழிந்து,
ஒரு கண்ணீர்த்துளிபோல் உருண்டோடி,
என் ஏக்கத்தை வெளிப்படுத்தியதோ? இல்லை,
அவளின் இதழ்களில் பட்டு, ஒரு முத்தம்போல் கரைந்து,
என் காதலின் ஆழத்தை உணர்த்தியதோ?

அந்த ஒரு துளி மழை, வெறும் நீர்த்துளி அல்ல;
அது என் காதலின் தூதுவன்.
அது அவளின் மனதை நனைத்து,
என் அன்பின் விதையை விதைத்ததோ?
ஒவ்வொரு துளியும் என் காதலின் மொழியைப் பேசியது,
அவளின் இதயத்தில் ஒரு புதிய அத்தியாயத்தைத் தொடங்கியது.

கவிஞர் ரா.ரமேஷ், திருப்பூர்

# மருதம் தேடி நிற்கும் நீ!




நீண்ட இடைவெளி
நீயும் நானும் சந்தித்து
உன்னோடு பேசிக்கொள்கிறேன்
என்னோடு உன் நினைவுகள் வாழும் போது

மடல் எதிர்பார்ப்பு
மங்கிடா காலம்
மங்கிய இருட்டிலும்
மருத நிலம் கேட்கின்றது உன்னை

உழுது மாடுகளும் மாட்டு வண்டியும்
ஊரில் நிறைந்தே காணப்படும்
எங்கும் ஒரே அமைதி மிதக்க
ஏங்கும் கைக்குத்தரிசியும் மண்பானைச் சோறும்
எம் ஊரின் மண்வாசனையை பேசிட

ஆற்றுமீன் அதன் சுவை சொல்ல
ஆக்கிப்போடுவா என் அம்மா
தரையில் அமர்ந்து தாமரை இலையில்
தயிருடன் சாதம் உண்பது
தேடியும் கிடையாது!

பிள்ளையார் கோவில் முன் நின்று
பிள்ளையாரப்பா எனச் சொல்லி
தலையில் நீ குட்டுவது
நினைவில் கொண்டுவரும்
ஞாயிறு திருப்பலி
எது எப்படியாயினும்
மருத நிலம் தேடுகிறது உன்னை!

சிவராத்திரி, சித்திரைக் கஞ்சி
சாம்பல் திருநாள் முட்டையடி
எத்தனை விழாக்கள்?
எங்கே தொலைந்தது
கச்சான் பருப்பும்
நாட்டு முட்டைகளும்

அறுவடை காலம் பாதையோரம்
கொட்டிய வைக்கோல் இருமருங்கும்
அடுப்பில் நெல் அவியப் போடுவதும்
பாதை இரு மருங்கும்
நெல் காயப்போடுவதும்
பாசமுடன் இன்றும் உனை
தேடுகிறதே மருத நிலம்

கவிஞர் திருமதி. ஜூவனீற்றா கிங்ஸ்லி, கல்முனை, இலங்கை

# எம் மதமும் எம் மதம்

இன்று மனிதர்களின்
நிழலில் மதங்களின்
வியர்வை நாற்றம்

மனிதாபிமானம் தொலைத்த
பகுத்தறிவு ஆடையின்றி
அம்மணமாய்

மதங்களின் பெயரில்
இரத்த துளிகள்
பூமிக்கு படையலாய்

மாறவேண்டும்
மறக்க வேண்டும்
மதங்களின் முகவரிகளை

எல்லா உடலும்
சதையால் மூடப்பட்டது
மதங்களால் அல்ல

சாதியும் மதமும் கருகிய
இடத்தில் மனிதத்தின்
பசுமை பரவட்டும்

எம் மதமும் எம் மதம்
இந்த வார்த்தைகள் இனியாவது
தேசீய கீதம் ஆகட்டும்




கவிஞர் ரா. பிரேம் சுரேஷ், கோத்தகிரி

# நடிப்பு நிறைந்த உலகம்

உயிர்ப்பைச் சுமந்து உலவிடும் வரையில்
வயிற்றுப்பை நிரப்பி வளர்க்கும் வகையில்
உள்ளொன்று மறைத்தே உண்மையென உரைத்தே
கள்ளத்தைப் போர்த்திக் கருணையாய்க் காட்டியே

அகத்துள் எரிந்து அறத்தை மறந்தே
முகமூடி அணியா முறுவலால் மறைப்பர்!
பற்றாய்த் தோன்றும் பாசாங்கு வழியது!
நன்றாய் நடிப்பு நிறைந்த உலகமிது!



கவிஞர் மாலதி இராமலிங்கம், புதுச்சேரி

# யாதுமாகி நின்றாள் பெண்

எழுத முடியாத கவிதை பெண்
விழ்த்த முடியாத உறவு பெண்
இயற்கை தந்த அற்புதம் பெண்
ஐம் பூதங்களின் வடிவமே பெண்

அகிலம் போற்றும் அதிசயம் பெண்
ஆக்கமும் உருவாக் கமும் பெண்
மேன்மையும் தாய்மையும் பெண்
அன்பையும் பண்பையும் என்றும் விதைத்வள் பெண்


தண்ணீகர் யில்லா தியாகமும் பெண்
தன்னைத் தானே செதுக்குபவரும் பெண்
சிற்பியாய் குடும்பத்தை வடிப்பவள் பெண்
சீர்படுத்தி துயர் களைபவள் பெண்

கலைகளுக்கு தலைமகளாய் இருப்பவள் பெண்
உலகை ஆள்பவளும் பெண்
ஆற்றலுடன் அர்புதம் செய்பவள் பெண்
மாற்றங்கள் பல நிகழ்த்துபவரும் பெண்.

தாரமாய், தோழியாய் சகோதரியாய் பெண்
உறவாய் உயிராய் ஆள்பவரும் பெண்
புவியிலே புண்ணிமம் செய்தார் பெண்
சிந்தை எல்லாம் குடும்பநலனே பெண்

ஏற்றம் கண்டிட உழைப்வள் பெண்
சோர்வு அண்டாமல் சுறுசுறுப்பாய் பெண்
கருணை உள்ளம் கொண்டவள் பெண்
அடிமை விலங்கை உடைந்தவளும் பெண்

பெண்ணையும் பெண்மையும் போற்றுவோம்
நாம் துணைமாய் நின்று காப்போம்
தன்நலம் மறந்து சேய்நலம் காப்போம்
நிகரில்லா தனிப்பெரும் உறவை மதிப்போம்.



கவிஞர் ஆதி. சுப. சரவணன், புதுச்சேரி

நயனம் நவிலும் காதல்
திருக்குறளில் களவும் கற்பும்
****

ஈரடியில் பொருள் கண்ணை சிமிட்டியதோ
ஒவ்வொன்றும் ஒவ்வொரு கதை பேசும்
தலைவன் தலைவி மறைமுகக் காதல்
இயற்கையில் தொடங்கி தொடங்குவது கற்பே
திருமணம் மூலம் ஒன்றாகி மலர்ந்தது
காதல் உணர்வு முதல் கண்ணாகியதோ
இருவரின் பார்வையில் வெட்கி நாணமுற்று
இன்பத்தில் ஒன்றாகி இணைவது தேனாகுமே
உணர்வை முதன்மையாக எதிரொளித்துக் காட்டி
உணர்ச்சியின் போது வருத்தம் கொண்டதோ
மனையாக மனதோடு கணவனை விரும்பினாளோ
கற்பின் முக்கிய அம்சமாக விளங்கியதோ
கற்புடை மகளிர் ஒருமை மகளிரோ
ஒழுக்கமும் மனத்தூய்மை இரண்டும் கண்களே
இல்லற வாழ்வில் முக்கியம் ஒழுக்கமே
ஆண் கற்பானது சமூகத்தில் ஆணின்
ஒழுக்கமாகி பொறுப்புணர்வை மிகுதியாக காட்டியது
கற்புடைமை இல்லற வாழ்வில் அங்கமாகி
கணவன் மனைவி இருவரின் உறவை
உருவாக்கி இன்பத்தையும் துன்பத்தையும் தாங்கி
எதிர்க் கொண்டு வாழ்வதே மனவுறுதியை அளித்ததே
அன்பும் பாசமும் நிறைந்த இல்வாழ்வில்
இருவரின் இதயங்கள் ஒன்றாகி சங்கமிப்பது
திருக்குறள் காட்டிடும் அன்பின் வாழ்த்தாகுமே..



கவிஞர் ம. செ. அ. பாமிலா பேகம், நாகர்கோவில்

மூவிதகாதல்
கடிதத்தில் காதலித்த,
எம் முன்னோர்களின் காதல்,
நீண்ட ஆயுள் கொண்டது;
அலைப்பேசியில் காதலித்த,
என் காதல்,
நிதானம் கொண்டது;
குறுஞ்செய்தி வழி காதலிக்கும்,
என் அடுத்த தலைமுறையின் காதல்,
நிதானத்துடன், நீண்ட ஆயுள் கொள்ளுமா?
என்ற ஐயத்தில் பல நாட்கள் கழிகிறது.



கவிஞர் ரா. தர்ஷினீப்பிரியா, கோவை

உன் வருகைக்கும் முன்னே
குளிர் காற்றை அனுப்பி
மண் மட்டுமல்ல விவசாயிகளின்
மனங்களையும் குளிர்
அடைய செய்தாயே
கார்மேக கூந்தல் கொண்டு
கட்டி அணைக்க நீ வந்தாய்
சற்று நிமிடம் ஆடிப்போனேன்
உந்தன் மழைத்துளி பட்டதும்



கவிஞர் ஸ்ரீவள்ளி, கோவை

# பாட்டுக்கொரு புலவனடீ! கிளியே!



பாரதியென்றொரு பைந்தமிழ்ப்பாவலன்
தாய்நாட்டின்விடு தலைக்குப்பாவால்
பாரதிரச்செய் துபாடுபட்டானடீ! கிளியே!
அவன்பாமரரும் போற்றும் கவிஞனடி.

பாண்டிநாட்டில் பாரதிபிறந்தவூர்
முத்தெடுக்கும் ஊரருகே
இணையிலாசிறப்பு கொண்டமைந்தவூரடீ! கிளியே!
எட்டயபுரமென் பதந்தவூரின் நாமமடி.

தமிழ்ப்பயனுற பாரதம்நனிசிறக் கத்தரணிக்குச் சின்னசாமி
தமையனவரை ஈன்றளித்தாரடீ! கிளியே!
இலக்குமியம்மா ளென்பவரேயவர் தாயாரடி.

எட்டயபுர அரசவைக்கவிஞனாய்
அரசனிடமே சமத்துவம்பேசி
ஏட்டினில் சீட்டுக்கவி எழுதினானடீ! கிளியே!
வீராதிவீரர் இவர்போல்யாருண்டு சொல்லடி.

விவேகானந்தரைக் குருவாய்க்கொண்ட
நிவேதிதையின் சீடரானதால்
குவலயமுய்ய புதுமைப்பெண்ணைப்
படைத்தானடீ! கிளியே
புதுக்கவிதைக்குத் தமிழில் வித்திட்டானடி.

தமிழைவாழ்த்தி தாய்நாட்டின்புகழ்
பாடித்தரணியில் இந்தியாவை
தலைநிமிரச் செய்தானடீ! கிளியே!
தலைமைக்கொண்டான் இந்தியக்கவிஞரில் அவன்தானடி.

கவிதை எழுதுவதைப்
வயிற்றுப்பிழைப்பாய்ப் பார்க்காதவனதை
தொழிலாய்க் கூறினானடீ! கிளியே!
அவனொரு கர்ம வீரனடி.

கண்ணனைக்காளியை
ஏசுவையல்லா வையெனயெல்லா இறைவடிவையும்
எண்ணியெண்ணிப் பாடினானேயடீ! கிளியே
தெய்வமந்த பேனாவுமென்றவன் மெய்ஞானியடி.

உருசிய நாட்டில் வெடித்த போராட்டத்தை
உறுமுகிறாள் காளியென்றானடீ! கிளியே!
உலகையவனொரு குடும்பமாய்ப் பார்த்தானடி.

பசியால்தான் துடிப்பதைத்தாங்கி
பிறவுயிர்துடிப்பதைத் தாங்காதவனாய்
ஓசியாய்க்கிடைத்ததை ஈந்தானடீ! கிளியே!
காக்கைக்குருவி மனிதரெல்லாமொன் றென்றானடி.

கவிஞர் தீந்தமிழ் திருமலைக்குமரன் அருணாச்சலம், கோவில்பட்டி.

தன் கையே தனக்குதவி
பிறர் கையை
எதிர்ப்பார்த்து நிற்காதே!
உன் நாடி துடிப்பு இருக்கும் வரை
பிறரை நாடாதே மனமே!



கவிஞர் மோனீஷா

# ரௌத்ரம் பழக்கியவனுக்கு



விடுதலை வேட்கையில்
நாடே கொந்தளிக்க
விடும் மூச்செல்லாம் அனல் பறக்க
தீட்டும் சொல்லெல்லாம் கவி விரிய
உணர்வின் ஓசையில்
உளமெலாம் கனலடிக்க
உழைப்பை ஒப்படைத்து
உயிர்கொடுக்கும் மக்களை
ஓர்குடையில் திரள வைத்து
அடிமைத்தனத்தை அடியோடழித்திட
பேச்சும் மூச்சும் தைரியம் வளர்த்து
அச்சாணித் தமிழில் அறிவை விதைத்து
உச்சி மீது வானிடிந்த போதிலும்
அச்சமில்லையென உறுதிச் சங்கொலித்தே
பாரெங்கும் பாட்டாலே
பேதங்கள் குறைந்தே
பாரத சரித்திரத்தின் பாதை விரிந்திடவே
ஆனந்தக் கூத்தாடிய வானக் கவிஞனுக்கு
ஆயிரம் வார்த்தைகளில்
அர்ச்சிப்போம் அனுதினமும்.

கவிஞர் இளையவன் சிவா


# மழை

வானத்தின் வர்க்கம்.
வயலின் சொர்க்கம்.
மலைகளின் புன்னகை.
மலர்களின் பொன்னகை.
மேகத்தின் ஓசை
தாகத்தின் ஆசை.
கருணையின் கை இருப்பு.
கருமையின் குடி இருப்பு.
மின்னலின் முகவுரை
இன்னலின் முடிவுரை.
வானவில்லின் எழுதுகோல்
வசந்தத்தின் திறவுகோல்
கலைஞனின் தூரிகை.
கவிதையின் காரிகை
காற்றின் வெப்பம்.
கவலையின் தெப்பம்.
பயிர்களின் பாடல்
உயிர்களின் தேடல்
மரங்களின் தாய்ப்பால்.
மனங்களின் இன்பப்பால்.
பூமியின் இன்பக்குளம்
புயலின் துன்பக்குளம்.
தூறலின் பிறப்பு
சாரலின் சிறப்பு.
கடலே தாய்மடி .



கவிஞர் முனைவர். முனியாண்டி, திருவில்லிப்புத்தூர்

எதுவும் இல்லாதவன் வீட்டில்
வசதியாய் வாழ்கிறது
வறுமை



கவிஞர் இரா. கோமதி, பொள்ளாச்சி

# ஆண்களின் பிரசவம்

படித்து முடித்து வேலை தேடும் போதும்
குடும்ப சுமைகளை ஏற்கும் போதும்
விரும்பிய பெண் பிரிந்து செல்லும் போதும்
வேலை செய்யும் இடத்தில்
சுயமரியாதையை இழந்து நிற்கும் போதும்
திருமண வரன் பார்க்கும் போதும்
திருமணதிற்கு பின் தாய்க்கும் மனைவிக்கும்
நடுவில் தவிக்கும் போதும்
பிள்ளைகளின் தேவைகளை
நிறைவேற்ற முடியாமல் துடிக்கும் போதும்
நண்பர்கள்-வேலை செய்பவர்கள்-உறவினர் முன்
பொது இடங்களில் வெற்று சட்டைப்பையை
தொட்டு பார்க்கும் போதும்
தன் மகளின் திருமண நிகழ்வின் பரிதவிப்பின் போதும்
தனக்கு முன்னே மனைவியின் இறப்பை காணும் போதும்
பிள்ளைகளின் வசவு சொல்லால் வாடும் போதும்
ஆண் பிரசவ வலி நிகழும்.



கவிஞர் உஷா தங்கவேல், அரியலூர்

# பெண்

பிறந்த முதல்நாளே தாயின்
மங்கல வாழ்த்தோடு மரியாதை
மிக்க *மகள்* ஆகிறாள்!
சிறிது வளர்ந்தவுடன் *சிறுமி*
என்ற பெயரோடு சிக்கல்களை
சமாளிக்க தயாராகிறாள்!
பருவம் எய்தியவுடன் பலபல
பிரச்சனைகள் தன்னை புரட்டிப்
போட்டாலும் புத்துயிர் பெறுபவர் *பெண்*!
*மனைவியாகிய* மறுகணமே தன்
வாழ்வில் ஏற்படும் மாற்றங்களை
மகிழ்வோடு ஏற்றுக்கொள்ளும் மலரவள்!
தான் *தாயென்று* உணரும்போது
பெருமிதம் கொண்டாலும், தனக்கென
வாழ்ந்த நாட்களை எண்ணுகையில்
அவள் வாழ்வின் அடிமையே!



கவிஞர் ரா. கௌசல்யா, சேலம்

# ஒளி வீசும் உறவு

உலகத்தை அறிந்து கொள்ள
புரிந்து கொள்ள வரலாறு தேவை.
உலகமே உன்னை அறிந்து கொள்ள
புரிந்து கொள்ள உண்மை நண்பன் தேவை.

உறவுகளை தாண்டியும் செல்வம்
செல்வாக்கை தாண்டியும் ஒருவர் மேல்
நாம் வைக்கும் உண்மை பாசமே
நட்பு என்னும் நம்பிக்கை.

கல்வி என்னும் ஓர் அறிவு உச்சத்தில்
உன்னை ஏற்றி விடும்
உண்மை நட்பு என்றுமே
உயிர் கொடுக்கவும் துணியுமே.

அன்பினால்  வருகின்ற உறவும்
முகம் பார்த்து பணம் பார்த்து வரும் உறவும்.
சுயநலத்தில் நலம் நாடும் உறவும்
உண்மை தொலைத்த கானல் நீரே.

இடர் கலைந்து இன்பம் தரும் உண்மை உறவு நட்பு
"அதியமான் ஔவையாரின் நட்பு"
போர் நிறுத்தி புனிதம் காணும் தூய அன்பின் நட்பு.

பிசிராந்தையார் கோப் பெருஞ்சோழனின்நட்பு
பார்க்காத இதயத்தின்  உணர்வு மிகுந்ததெய்வ நட்பு.

அன்பு நட்பு பாசமெல்லாம் புனிதமான நட்புக்கு
புகழ் சேர்க்கும் ஒளி விளக்கு.
நட்பு என்னும் ஓர் உறவு எதிரிகளையும் புனிதர்களாய்
புடம் போட்ட தங்கமாய் ஒளி வீசும் உறவு.



கவிஞர் ஜேப்பி@பன்னீர்செல்வம், சேத்தியாத்தோப்பு

# கடல் மீன்

கடலில் இருந்த
மீன் கதறியழுது
சிந்திய கண்ணீரால்
உப்பாய் இருந்தது
கருவாடு

அதுசரி
மீன் ஏன் அழுதது
மீன் சொல்கிறது
நெகிழிப்பைகள் புட்டிகளை
கடலில் போடுவதால்
மீன்குஞ்சுகள் இறக்கின்றன
மீன்களும் இறக்கின்றன
நாங்கள் கிடைப்போம்
என்ற நம்பிக்கையில்
வலை விரிக்கும் மீனவனுக்கு
கிடைக்காமல் போகிறோம்

மீனவனுக்கு மீனாகிய
நாங்க கிடைக்காமல்
பட்டினியில் இறக்கிறான்
அதை கண்டு
கடலம்மா அழுகிற
கண்ணீரால் கடலும்
உப்பாய் மாறுது



கடலம்மா அழுவது
கண்டே மீனாகிய
நாங்களும் அழுகிறோம்
மீன் சொல்லி முடித்து
கருவாடாய் போனது
இப்போ அந்த கருவாடு
மண்ணுக்கு உரமாக
மண்ணுள் புதைக்கப்பட்டது
அது ஏதோ ஒரு மரமாக
பிறப்பெடுத்து வரட்டுமே

கவிஞர் செ. இலட்சுமணக்குமார், ஈரோடு

பாட்டுக்கு ஒரு புலவன் பாரதி
இந்திய நாட்டின் பல கவிஞர்கள்
இருந்தாலும், மறைந்தாலும்
பெயர் சொல்லும் கவிஞன்
நம் தமிழ் அன்னை ஈன்றெடுத்த
தவப்புதல்வன் நம் பாரதியார்.



தமிழ்நாட்டிலும், பின்பு காசியிலும்
கல்வி பயின்ற நம் புரட்சிக் கவிஞன் பாரதி
எண்ணற்ற கவிதைகளையும்,
காவிங்களையும் படைத்துள்ளான்

எழுச்சிமிக்க பேச்சுத் திறமை கொண்டு
பல கவிகளை பாடி சுதந்திர தாகத்தை
மக்களுக்கு ஊட்டிய பெருமை நம் பாரதிக்கு உண்டு.
பாப்பா பாட்டு, குயில் பாட்டு, கண்ணன் பாட்டு
இப்படி பல பாடல்கள் பாடி தமிழுக்கு
வந்தனை செய்துள்ளான்.
அவன் இயற்றிய பாஞ்சாலி சபதம்
மிக அற்புதமான காவிய படைப் பே !

சுதந்திரத்திற்காக கண்ணீர்விட்டு அழுது
என்று தணியும் இந்த சுதந்திர தாகம் என்று பாடினான்.
காலங்கள் மாறினாலும் இந்த உலகம் உள்ளவரை
அவன் புகழ் பாடிக்கொண்டே இருக்கும்.

கவிஞர் ஆ. கிருஷ்ணவேணி, ஊத்தங்கரை



அகர முதல

அன்பின் உயிர்ப்பில் நிஜமாய்
ஆறுதலின் உயிர்ப்பில் நிஜமாய்
இம்சையின் உயிர்ப்பில் நிஜமாய்
ஈடேற்றத்தின் உயிர்ப்பில் நிஜமாய்

உறவுகளின் உயிர்ப்பில் நிஜமாய்
ஊழ்வினைகளின் உயிர்ப்பில் நிஜமாய்
எதிர்ப்பார்ப்புகளின் உயிர்ப்பில் நிஜமாய்
ஏமாற்றங்களின் உயிர்ப்பில் நிஜமாய்

ஐயங்களின் உயிர்ப்பில் நிஜமாய்
ஒத்தாசைகளின் உயிர்ப்பில் நிஜமாய்
ஓய்வுகளின் உயிர்ப்பில் நிஜமாய்
ஔடதங்களின் உயிர்ப்பில் நிஜமாய்

விதியின் கோடு வரையப்படாமலும் இல்லை
அனுபவப் பாடம் புகட்டப்படாமலும் இல்லை
அச்ச உணர்வு பற்றாமலும் இல்லை
மொத்தமாய், நிஜங்களோ
வெளிப்படாமல் இல்லவே இல்லை!



கவிஞர் ஹாஸ்மியா தீஹா, கெக்கிராவ, கலாவெவ (இலங்கை)

மரபு, சமூகம்:

மண்டைக்கனமாயிருந்தால்,
மணிமகுடமும்,
மண்ணிலே வீழ்த்திடுமே!

காதல்:
மங்கையவளும்,
மனதிலுள்ளவனை,
மணிமகுடமேற்றி,
மணிவிழா நடத்திடுவாளே!

மரபு:

மண்ணின் மைந்தரும்,
மதிப்பாக நடந்திட்டாலே
மத்திம வயதினிலே,
மணி மகுடமும்,
மரியாதையாக வந்திடுமே!

ஆன்மீகம்;
மாதாவை மதித்ததாலே,
மணிவிழா மறுத்து,
மனையாளுடன்,
மறுவார்த்தை பேசா,
மாமனிதனும்,
மறத்து வனவாசம்,
மாய்ந்தே போனான்.

சுயமுன்னேற்றம்:
சுயமாக சிந்தித்தே,
சுயமாக காலில் நின்றே,
சுயமாக உயர்ந்தாலே
சுலபமாக வந்திடுமே,
மணிமகுடமும்...

அரசியல்,பகடி;
மகனுக்குப்பின் மகன்,
மறுபடியும் மறுபடியும்,
மணிமகுடத்திற்காக,
மாறியே மாறிடுமே,
மனித குள்ள நரிகளும்,
Money கொடுத்தே!

பெண்கள்;
மனிதியவளின்,
மணி கேசமதிலே,
மணக்குமே,
மலரதுவமே,
மணி மகுடமாய்!



கவிஞர் நீலா சுபாஷ், ஆக்கூர்

# மாயங்கள்



விலங்கிட்டு விடியலை
தேடாதே
விலகாத அன்பிலே
இருத்திடு
வலையிட்டு மூடாதே
மாயப்புகையில்
சிக்கும் மனமே
அவதாரங்கள் கலைந்து
அரிதாரம் உதிர்கையில்
திசையறியாத பயணமே

கவிஞர் சுந்தரிபாஸ்கரன், திருப்பூண்டி (நாகப்பட்டிணம்)

# என் மனசேனோ கிறங்குதடி

என் மனசேனோ கிறங்குதடி
சிறகடிச்சிப் பறக்குதடி



கரும்புத் தோப்போரம்
கண்ட கருவாச்சியே
எறும்பா நான்வாரேன்
ஏத்துக்கடி என்னத்தான்

ஊறும் ஒநெனப்பு
உள்ளுக்குள்ள உசுப்புதடி
ஆறுதலா நாலுவார்த்த
அழகாத்தான் சொல்லுபுள்ள

நீநடக்கும் தெசயெல்லாம்
நெழலா வாரேம்புள்ள
மடக்கும் கண்ணால
மாயவித்த காட்டாதபுள்ள

என்மனசேனோ கிறங்குதடி
சிறகடிச்சிப் பறக்குதடி
ஒன்னோட ஒன்னானா
ஓராயிரம் ஆசயடி

என்னத் தந்து
ஒனக்குள்ள உசுரானேனடி
மண்ணுக்குள்ள மறையுவர
மாறாது யெங்காதலடி

கவிஞர் கிருஷ் அபி

பாரதியையும் காணவில்லை
குருவிகளையும் காணவில்லை

தீப்பொறிகளை
விதைகளாய் விதைத்ததால்

மகாகவியின்
கவிதை காடுகள் மட்டும்

இன்றும்
எரிந்து கொண்டிருக்கின்றன



கவிஞர் அன்னலட்சுமி சரவணன்

# வாழ்க்கைத் துணை

வழித்துணை இருந்தால் பயணம் இனிதாகும்!
வாழ்க்கை ஒரு பெரும்பயணம்! இல்லற
வாழ்வில் இணைந்து பயணிக்கும் சக்தியே
வாழ்க்கைத் துணை! நற்பண்பு, உண்மையன்பு
இணைந்த குணவதி துணையாக வாய்த்தால்
இல்லறம் நல்லறமாய் விளங்கிடுமே வாழ்வினிலே!
இன்ப துன்பங்களில் இணைந்து தோள்கொடுத்து
நம்பிக்கையை விதைப்பவள் வாழ்க்கைத் துணை!
வேரெனத் திகழ்ந்து வீழாமல் காத்திடுவாள்!
வாலிபக் கனவுகள் நனவாக உறுதுணையாய்
வயோதிகக் காலத்தில் தாங்கும் பெருந்துணையாய்
புரிதலுடன் ஒருமனதாய் இணைந்திருப்பாள் வாழ்வினிலே!
இல்லாமை வாட்டிடும் இல்லங்களில் இல்லாளால்
உள்ளம் உடையாமல், சொல்லால் உறுதிசேர்த்து
ஒளிகூட்டி, உழைத்து உயர்த்திடுவாள் இல்லத்தை!
கணவனின் வருவாய்க்குள் நடத்திடுவாள் குடும்பத்தை!
தானும் பணியாற்றி பெருக்கிடுவாள் வருவாயை!
பிள்ளைகளை வளர்த்து நல்லோராய் மாற்றுவதில்
சலிப்பின்றி தன்கடனை ஆற்றிடுவாள் அன்னையென!
உறவுகள், நட்புகள் தொடர்ந்திருக்க அன்பாலே
சிறப்புற செயலாற்றும் அற்புத சக்தியவள்!
உள்ளம் உடைகின்ற தருணங்களில் உறுதுணையாய்
தோளில் சாய்த்து துடைத்தெறிவாள் துயரங்களை!
ஒருவருக் கொருவர் உறுதுணையாய் இறுதிவரை
இருப்பதே வாழ்க்கைத் துணை என்றுணர்வோம்!
நீயா நானா எனும்நிலை இல்லாமல்
நீயும் நானும் என்றிணைந்தால் துன்பமில்லை!
ஈருடல் ஒருயிராய் இல்லறத்தில் இணைந்தோரால்
சிறப்படையும் இவ்வுலகம்! சேர்ந்திடும் இன்பங்கள்!



கவிஞர் ஈ. சீ. சேஷாத்ரீ

பதில் தெரியா
இல்லா கேள்விகளில்

மறுமொழிக்கான தயாரிப்பு
யோசிப்பு காலங்களில்

உதட்டு மொழி
பகிர்ந்தால் சிக்கலெனில்

மனதுக்கும் புத்திக்கும்
சரியென்கையில் அமைதி



கவிஞர் சுந்தரராஜன், மானாமதுரை

# பக்குவம்

மொட்டென்று அரும்பி
பக்குவமாய் பூவென்று மலர்ந்து
மணம் கமழும் பூக்கள்!
புழுவாய் ஜனித்து இலைதழை தின்று
பக்குவமாய் வண்ணம் பெற்று
இயற்கையாய் அழகு பெறும்
வண்ண வண்ணப் பட்டாம்பூச்சி!
தன் பசி தீர்க்க மட்டும் உணவுக்காக
வேட்டையாடும் தன் இனத்தை
அழிக்காத பக்குவம் படைத்த
ஐந்தறிவு விலங்குகள்!
விதைத்த விதையை பக்குவமாய்
பாதுகாத்து பொருளாய் கொடுத்து
வயிறு நிறைக்கும் விவசாயி!
குழந்தையாய் பிறந்து மண்ணில்
தவழ்ந்து பக்குவமாய் பெற்றவள்
பாலூட்டி சோறூட்டி வளர்க்கும்
மனிதன் மட்டும் ஆறாம் அறிவைப்
பயன்படுத்தி பக்குவம் அடையாமல்
நெஞ்சில் வஞ்சம் வளர்த்து
அடுத்தவனை ஏத்திப் பிழைத்து
விலங்கிலும் கீழாய் அலைவது ஏனோ?



கவிஞர் லதா சுப்ரமணியன், சென்னை

"என்னடா.. வந்தவன் திரும்பிப்போய் விட்டானா?" என்று கேட்டான் நரேன் கண்ணைத்திறந்து பார்த்து.

"நல்ல வேளை ... நீ.. தூங்கின மாதிரி இருந்ததினாலே உனக்கு மிகவும் பலமான அடின்னு பயந்து போய் ஓடியிருக்கான்" என்றான் வசந்த்.

"இப்ப மட்டும் என்னாச்சு. கையை காலை அசைக்க முடியவில்லை. எப்பா அந்தப் பயங்கரத்தை இப்போ நினைத்தாலும் பயமாக இருக்கிறது"

"அவன் இப்போ காபி வாங்கி வருவான். அது வரை படுத்திரு" என்றான்.

காபி வாங்கி வந்த கண்ணன்" சார். ஏதாவது வேணும்ணா போன் பண்ணுங்க.." என்று சொல்லி விட்டுக் கிளம்பினான் கண்ணன்.

"அவன் போயாச்சா? நாம் இவ்வளவு எளிதாக நினைத்து வந்த காரியம் இவ்வளவு சிக்கலாக மாறிப்போயிருக்கிறது? வசந்த், பிரபு நாம் எங்கே வரை போனோம் என்பதை எளிதில் தெரிந்து கொள்வார்.

அதுக்குள்ளே நாம் ஏதாவது செய்தாகணும். இப்படி ஆஸ்பத்திரிலே வந்து படுத்துக்கிடக்காவா இந்த ஊருக்கு வந்தோம்? சே... காலை கூட மடக்க முடியவில்லை" என்று வலியோடு எழுந்து உட்கார்ந்தான்.

இரண்டு கப்களில் காபியை ஊற்றி, ஒன்றை நரேனிடம் தந்து விட்டு" என்ன செய்யலாம் நரேன் சொல்லு?" என்றான்

நரேன் ஒன்றும் சொல்லாமல் சன்னலைப்பார்த்துக் கொண்டிருக்க, திரும்பிப்பார்த்த வச்ந்த் "போச்சுடா..உனக்கு இந்த கிறுக்கு எப்போது விட்டுப்ப்போகப் போவுதுண்ணு தெரியல" என்று தலையிலடித்துக்கொண்டான் வசந்த். அது, அழகாக இங்குமங்கும் சுற்றிக் கொண்டிருந்து, கொஞ்சம் ஆச்சரியாமாகவும் , அதிசயமாகமாகவும் தோன்றியது நரேனுக்கு..

கவிஞர் இராஜகை நிலவன், மும்பை

## மருத்துவ மனையில் நரேன் அத்தியாயம் - 9

நரேன் சன்னலில் அம்ர்ந்த்திருந்த அந்தப் புறாவின் அசைவுகளைஆச்சர்யாமாக பார்த்துக்கொடிருந்தான். அலகு மெல்லிய வளைவுடன் அந்த மூக்கின் அருகில் ஒரு சின்ன வெள்ளைப் புள்ளியில் ஆரம்பித்து பின்னால் மெல்லிய சாம்பல் நிறத்தில் இரு கண்களையும் தொட்டது.

" என்ன திரும்பவும் ..இன்றைக்கும் புறா ஆராய்ச்சியா ?" சிரித்துக் கொண்டே வெளியே எட்டிப்பார்த்தான் வசந்தன். அங்கே கண்ணனும் பிரபுவும் வந்து கொண்டிருந்தார்கள்.

" நரேன். கொஞ்சம் படுத்துக் கண்ணை மூடிக்கொள். அதோ திரும்பவும் கண்ணன் பிரபுவோடு வந்து கொண்டிருக்கிறான்" என்றான் வசந்த்.

பிரபு வந்து நலம் விசாரித்து விட்டு " வசந்த். உங்களுக்கு என்ன தேவை என்றாலும் கண்டிப்பாக கேளுங்கள். நான் ஏற்கனெவே தலைமை அலுவலகத்தில் பேசிவிட்டேன். எல்லா செலவுகளையும் நான் வாங்கித்தந்து விடுவேன். கவலைப்பட வேண்டாம். இப்படி சென்னையிலிருந்து கொரோனாவிற்காக மருந்து தேடி வந்து விட்டு... சாரி... இப்படி ஆகும் என்று எதிர்பார்க்கவில்லை. நரேன் விழித்தெழுந்ததும் எனக்கு போன் பண்ணச் சொல்லுங்கள்" என்று சொல்லிவிட்டு கிளம்பினார்.

" நீங்கள் வந்ததற்கு ரொம்ப நன்றி சார்" என்று வசந்த் மருத்துவ மனையின் வாயில் வரை வந்து வழியனுப்பி விட்டு திரும்ப வந்தான்.

" இனி என்ன செய்யலாம்.. ஒண்ணு பண்ணேண். நீ திரும்பப் போய் அந்த இடத்திலே அந்த செடியை தேடி பார்த்து விட்டு வாயேன்" என்றான் நரேன் எழுந்து அமர்ந்தவாறு.

"அதெல்லாம் சரி தான். ஒரு தடவை யானை கிட்டே மாட்டினது போதாதா? இதிலே வேறே பிரபு வேறு எந்த திட்டம் தீட்டிக் கிட்டிருக்கிறாரோ?.... " பயந்தவாறு சொன்னான் வசந்த்.

"போடா... நீ ஒரு சரியான பயந்தாங்கொள்ளியாக வந்து சேர்ந்திருக்கிறாயே..." வலியோடு முகத்தைச் சுழித்துக் கொண்டு சொன்னான் நரேன்.

கவிஞர் இரஜகை நிலவன், மும்பை

"ஆமா தீராதி தீரர்.. இந்தா ஆஸ்பத்திரியிலே வந்து விழுந்து கிடக்கிறார். பாருங்கள். "

" வச்ந்த்.. நேற்றைக்கு அப்புறம் என்னாச்சு?"

யானைகள் வருவதைப் பார்த்து, அந்த ஆபிசர் ஓட ஆரம்பித்தார்.

நீ பெரிய சூரன் மாதிரி நின்னுக்கிட்டேயிருந்தாய். யானைகள் நம் அருகில் வந்து விட்டன.

எனக்கு என்ன தைரியம் வந்ததென்று எனக்கேத் தெரியவில்லை பக்கத்திலே நின்ற தென்ன மரத்திலே வேகமாக ஏறிட்டேன்.

அவர் பாட்டுக்கு அவர் ஒடி போய் ஒளிஞ்சிகிட்டார். நீ நின்னதை பார்த்துட்டு யானைகள் உன்னைத் தாண்டி ஓடி வர அங்கே வந்த ஒரு பெரிய யானை உன்னை துதிக்கையால் தூக்கி ஒரு சுற்று சுற்றி அப்படியே தூக்கி எறிந்தது.. அதற்குள்ளே என்னவோ சத்தம் வர யானைகளெல்லாம் ஓட ஆரம்பிடுச்சி.." என்றான் வசந்த்.

" நல்ல வேளை யானை பக்கத்திலே வர்றதுக்கு முன்னாலே எனக்கு மயக்கம் வந்ததாலே என்ன நடந்தது என்று தெரியாமலே போய் விட்டது." என்றான் வலியோடு நரேன்.

"அப்புறம்... யானை எல்லாம் ஓடிப்போயிடுச்சான்னு பார்த்துட்டு அந்த ஆபிசர் திரும்பி வர, ரெண்டு பேரும் சேர்ந்து உன்னைத் தூக்கிட்டு வந்து காரிலே போட்டு இந்த ஆஸ்பத்திரிக்கு கூட்டிட்டு வந்தோம்."

"ஏயப்பா இவ்வளவு நடந்திருக்கா...?"

" நாலஞ்சி யானை தான் இருக்கும்... அது நடந்து வந்த வேகம்.. உன்னை தும்பிக்கையிலே தூக்கும்போது எனக்கே தலைச்சுற்று வந்திடுச்சு"

கவிஞர் இராஜகை நிலவன், மும்பை

## மருத்துவ மனையில் நரேன் — அத்தியாயம் - 9

" டேய் பையா வசந்த்... இது ஒண்ணு ரெண்டு ரூபா சமாச்சாரமில்லை.. நாலு கோடி ரூபா விசயம்?"
"ஆமா. நரேன். நீதான் என்ன நெனைச்சிகிட்டுப் பேசற...?"
" நாம சென்னையிலே பேசிகிட்ட மாதிரி... வந்தோமா..செடியை புடுங்கிட்டுப் போனோமாங்கிற விசயமில்லே..."
"சரி.. ரொம்ப சாதாரணமா சாதித்திரலாமுண்ணுதான் நெனச்சோம். அதுக்கு இப்ப என்ன சொல்ல வர்றே..."
"இப்படி...ஆஸ்பத்திரியிலே இருந்தா நடக்க கூடிய காரியமில்லை."
"சரி. போட்டிருக்கிற கட்டை எல்லாம் அவுத்துப்போட்டுட்டு திரும்பவும் காட்டுக்குள்ளே போகணும்கிறியா?"
" நான் போகவில்லை", "அப்புறம்", " நீ தான் போகப்போறே..."
"ஏண்டா... நேற்று சாயங்காலம் தான் யானைகிட்டே அடி வாங்கிட்டு வந்திருக்கே... உனக்கு புத்தி எதுவும் கெட்டுப் போச்சா?"
"ஒரு பிரச்சினை இல்லை... நீ தான் வசந்த். போகிறாய்?"

"எப்படி... திரும்பவும் போய் யானை கிட்டே மாட்டிகிடச் சொல்லுகிறாயா?"
"டேய். நேற்று யானை வந்தது எதிர்பார்க்காத விசயம்"

"சரி.. இன்றைக்கு என்னைப் பலி கடாவாக்க முடிவு பண்ணியாச்சு. என்ன செய்யணும்?" என்றான் வசந்த்.

" நம்ம ஊரிலேய்ருந்து வந்தப்ப கிடைச்சாரு பாரு ஒரு ஆட்டோகாரரு.ஆங் அவர் பெயர் கூட ரமணி. ஆங்.. நீ வென்னீர் போட்டு சூடாக குளிச்சிட்டு டிரஸ் பண்ணிட்டு வா.. நான் அந்த ரமணியைக் கூப்பிட்டு பேசறேன். "

"அந்த பர்ஸிலேயிருந்து ஒரு சின்ன பேப்பரிலே அவர் நம்பரைக் குறித்து வச்சிருந்தேன். அதை எடுத்து என் மொபைலிலே டயல் பண்ணி தந்து விட்டு கிளம்பு. நீ வர்றதுக்குள்ளே பிளான் தயாராக இருக்கும்" என்றான் நரேன்.

வசந்த் நம்பரை எடுத்து போன் பண்ண ஆரம்பித்தான்.

**தொடரும்...**

கவிஞர் இரஜகை நிலவன், மும்பை

அஸ்மாவுக்குத் தன் அறை ஜன்னல் வழியாக வெளியே தெரியும் மங்கலான பகல் வெளிச்சத்தைப் பார்க்கும் போதெல்லாம், அவளது நெஞ்சுக்குள் ஒரு நீளமான பெருமூச்சு தானாகவே உண்டாகும். இப்போதும் அப்படித்தான் இருந்தது. அந்தப் பெருமூச்சு, கணவர் அப்துல்லாஹ்வின் அன்பால் கிடைத்த நிம்மதியைச் சிதைக்காமல் அவள் மனதில் உள்ளதை சொல்ல முடியாமலும் அவளுள் நடக்கும் போரின்
வெளிப்பாடு தான்.

திருமணம் முடிந்து புதிய வாழ்க்கைத் துணையுடன் நிம்மதியாக வாழ்ந்தாலும், மனதில் இனம் புரியாத ஒரு பாரம் அவளை ஆட்கொண்டது. அவளின் கணவர் அப்துல்லாஹ் மிகவும் நல்லவர், அவள் மேல் அக்கறை உள்ளவர், தொழுகையை முறையாகப் பேணுபவர். தன் மனைவியை அவர் மரியாதையாக நடத்துகின்றார். ஆனால், அஸ்மாவின் இதயத்தில் ஆழப் புதைந்திருந்த தன் கனவைப் பற்றி அவரிடம் பேசுவதற்கு மட்டும் அவளுக்குத் துணிவில்லை. அவள் மனதில், 'கணவரின் மனதைக் காயப்படுத்தாமல் இருக்க, என் கனவைக் கொல்வதுதான் ஒரே வழியா?' என்ற போராட்டம் தான் ஒவ்வொரு முறை அவள் தன் கணவரிடம் மனது விட்டு பேச முற்படும் போதெல்லாம் நிகழும்.

அவளுக்குப் படிப்பதென்றால் கொள்ளைப்பிரியம். மற்ற அனைத்தையும் விட, ஓவியம் வரைவதில் அளவற்ற ஆர்வம். ஒரு நாள், ஒரு புகழ்பெற்ற ஓவியராக வரவேண்டும் என்பது அவளுடைய இளமைக் கனவாக இருந்தது. பள்ளியில் எல்லாக் கலைப் போட்டிகளிலும் அவள்தான் முதல் இடம் பிடிப்பாள். அஸ்மா இமைகளை மூடி தன் பள்ளி நாட்களை மீட்ட ஆரம்பிக்கிறாள்..

அஸ்மா பள்ளியில் அமைதியான, கூச்ச சுபாவமுள்ள மாணவி. மற்றவர்களுடன் பேச தயங்கும் அவளுக்கு, கைகளில் பென்சிலோ தூரிகையோ கிடைத்தால் அவள் உலகம் மாறும். ஓவியம்தான் அவளது உயிர்த்துடிப்பு. ஒருமுறை, ஆசிரியர் வரையச் சொன்னதை விட்டுவிட்டு, மதீனாவின் பள்ளிவாசலை நுணுக்கமாக வரைந்து அனைவரையும் வியப்பில் ஆழ்த்தினாள். பத்தாம் வகுப்பில், மாவட்டப் போட்டியில் தெரிவு செய்யப் பட்ட நிலையில் அவள் நடுங்கினாலும், சுப்ஹ் தொழுது கையேந்தி


கவிஞர் ரீஸ்னா ரமீஸான், அக்குறணை (இலங்கை)

பிரார்த்தனை செய்த புனிதமான துணிவு அவளுக்குள் வந்து, முதல் பரிசை வென்றாள். அது அவள் வாழ்வில் கிடைத்த மிக முக்கியமான அங்கீகாரமாக இருந்தது.

வசதியின்மை காரணமாகப் படிப்பு இடையில் நின்றது. திருமணமுடித்து மறுவீடு புகும் போது தாய் சொன்ன, 'அவங்க மனசு நோகாம நடந்துக்கோமா' என்ற வார்த்தையும், தன் கூச்ச சுபாவமும், தன் கனவைக்கூட வாய் விட்டுச் சொல்லாமல் அவளை அமைதி காக்க வைத்தது. அவளது ஓவியக் கனவு, ஒளித்து வைத்திருக்கும் பொக்கிசம் போல, யாருக்கும் தெரியாமல் பூட்டி வைக்கப்பட்டிருந்தது.

ஒருநாள் மதிய உணவு முடிந்து, அப்துல்லாஹ் பள்ளிவாசலுக்குச் சென்ற பின், அஸ்மா விரைவாக தன் அறைக்குள் சென்றாள். அவள் மிகவும் ஆழமாக ஒளித்து வைத்திருந்த ஓவியப் பெட்டியை எடுத்துப் பிரித்தாள். வர்ணப் பென்சில்களின் வாசம் அவளது இளமைக்கால நினைவுகளைச் சுமந்து வந்தது. அவள் சிறு துண்டு அட்டையை எடுத்து, அதில் ஒரு அரபு எழுத்து வடிவில் 'அல்ஹம்துலில்லாஹ்' என விரைவாக வரைய ஆரம்பித்தாள். அந்த வேலை அவளது மனதில் பல வருடங்களுக்குப் பிறகு நிம்மதியைத் தந்தது.
திடீரென்று, முன்புறக் கதவைத் திறக்கும் சத்தம் கேட்டது.

அஸ்மா அதிர்ச்சியில் உறைந்து போனாள். அவள் வரைந்து கொண்டிருந்த ஓவியம் அவள் கையிலிருந்து நழுவப் பார்த்தது. அவள் மின்னல் வேகத்தில், பெட்டியை இழுத்து, அதன் மீது ஒரு பெரிய துணியைப் போட்டு மறைத்தாள். அவளது முகம் சிவந்து, மூச்சு இரைத்தது.

அப்துல்லாஹ் உள்ளே வந்தார். 'என்ன அஸ்மா? நீ ஏன் இப்படி பயந்து போயிருக்கிறாய்? நான் சீக்கிரம் வந்துவிட்டேன். மதிய உணவு செரிமானமாகவில்லை, பள்ளிவாசலில் இருந்து சீக்கிரமே வந்துவிட்டேன்' என்றார். அஸ்மா தழுதழுத்த குரலில் 'ஒன்றுமில்லைங்க' என்று சொல்லித் தலையைக் குனிந்தாள்.
அப்துல்லாஹ் அங்கிருந்த துணியால் மூடியிருந்த பெட்டியைப் பார்க்கவில்லை. அவர் அவள் அருகில் வந்து, பாசத்துடன் அவளது தோள்களைத் தொட்டு,

கவிஞர் ரஸ்னா ரமீஸான், அக்குறணை (இலங்கை)

அவளை அழைத்துச் சென்றார். அப்துல்லாஹ்வின் பாசத்தில் கரைந்தாலும், தான் வரைந்த ஓவியத்தை மறைத்த குற்ற உணர்வு அவளது நெஞ்சை கனக்கச் செய்தது.
அனைத்தையும் நினைவு படுத்தி ஜன்னலோரமாய் நின்றிருந்த அஸ்மா, தன் கனவுகளின் சுமைகளைச் சுமந்து பெருமூச்சு விட்டபோது, ஓர் ஆழமான உள்ளுணர்வு அவளை உந்தியது. "இந்தத் தயக்கம் ஏன்? உன் திறமையை நீயே மறைப்பது, இறைவன் அளித்த அருளை மறுப்பதாகும். என்று அவளே தனக்கு கூறிக் கொண்டாள்.

அவள் விரைந்து எழுந்து, உளூ செய்தாள். குளிர்ந்த நீர், பல வருடங்களாக அவள் நெஞ்சில் உறைந்திருந்த தயக்கத்தை மெல்லக் கரைப்பது போல் உணர்ந்தாள். அவள் தொழுகை விரிப்பைப் பிரித்தாள்.
ஸஜ்தாவில் அவள் தலை பூமியைத் தொட்டபோது, அவளது மனதில் இருந்த பாரம் இறைவனிடம் சென்றது. "யா அல்லாஹ், நீ எனக்கு அளித்த இந்தத் திறமையை, வெறும் பயத்தின் காரணமாக மூடி மறைத்து, உன் அருளை நான் மறுக்க மாட்டேன். எனக்கு தைரியத்தை கொடு. என் கணவர் அப்துல்லாஹ்வைக் கொண்டு என் கனவுக்கு வழிகாட்டு. இந்தத் தொழுகைதான் எனக்கு , யா அல்லாஹ்!" என்று அவள் உருக்கமாக இறைஞ்சினாள்.

தொழுகையை முடித்து ஸலாம் கொடுத்தபோது, அவளது நெஞ்சில் ஒரு புதிய உறுதி பிறந்தது. அப்துல்லாஹ் பள்ளிவாசலில் இருந்து திரும்பி வந்து, கதவைத் திறக்கும் சத்தம் கேட்டது. எப்போதும் தன் கணவரைப் பார்த்துத் தலையைக் குனிந்துகொள்ளும் அஸ்மா, அன்று தொழும் போது தோன்றிய புனித உணர்வோடு நேராக, அசைவற்ற தூண் போல நிமிர்ந்து நின்றாள்.

அஸ்மா, தனது உள்ளத்தில் பல வருடங்களாக அடைபட்டுக்கிடந்த வார்த்தைகளைத் வெளிப்படுத்தத் தயாரானாள். அவள் கண்களில் நீர் திரையிட்டது. அது பயத்தின் கண்ணீர் அல்ல, விடுதலைக்கான கண்ணீர். "..நான் உங்ககிட்ட ஒரு விஷயம் சொல்லணும். ரொம்ப நாளா என் மனசுக்குள்ளேயே வெச்சிருக்கேன். இதச் சொன்னா நீங்க என்ன நினைப்பீங்களோன்னு எனக்கு பயமா இருந்துச்சு..." அப்துல்லாஹ்

கவிஞர் ரஸ்னா ரம்ஸான், அக்குறணை (இலங்கை)

அமைதியாக அவள் பேசுவதைக் கேட்டார். அஸ்மா தன் கனவு, போட்டி வெற்றி, இடையில் நின்ற படிப்பு என அனைத்தையும் சொல்லி முடித்தாள்.

"அஸ்மா... நீ எனக்கு ஏன் இவ்வளவு நாளா இதைச் சொல்லல? திறமையைப் பயன்படுத்துறதுல என்ன தயக்கம்? நீ பள்ளிவாசல்களை, இஸ்லாமியக் கலையை ஓவியமாக்கினால், அது ஒருவிதமான அழகான அழைப்பு (தஃவா) தானே?"
அப்துல்லாஹ்வின் வார்த்தைகள் அவளது காதுகளில் தேனாகப் பாய்ந்தன.

அப்துல்லாஹ்வின் சம்மதத்தைக் கேட்டதும், அஸ்மாவின் கண்கள் ஆனந்தத்தில் நிறைந்தது. இன்று, தொழுகையும் துணிவும் அவளுக்கு வாழ்வின் புதிய கதவைத் திறந்துவிட்டன. அப்துல்லாஹ்வின் உதவியுடன், அஸ்மா தனது வீட்டிலேயே ஒரு சிறிய கலைக் கூடத்தை அமைத்தாள். பத்து வருடங்களுக்குப் பிறகு, ஒரு குளிர்கால மாலையில், நாட்டின் முக்கிய கலைக்கூடம் ஒன்றில், அஸ்மாவின் தனிநபர் ஓவியக் கண்காட்சி வெகு விமர்சையாகத் திறந்து வைக்கப்பட்டது. கூச்சத்துடன் பள்ளிச் சுவர்களுக்குள் முடங்கிக்கிடந்த அந்தச் சிறுமியின் கனவு, இன்று உலகம் அறியும் உண்மையாக மாறி இருந்தது. அவளுடைய ஓவியங்கள், அவளுடைய துணிவின் வண்ணமாக ஜொலித்தன.

அஸ்மா புன்னகையுடன் தன் கணவர் அப்துல்லாஹ்வின் கைகளைப் பற்றிக்கொண்டாள். அவள் முகத்தைப் பார்த்த அப்துல்லாஹ், "அஸ்மா... நீ எப்போதும் சிறந்த கலைஞர்தான். நீ எதை மறைச்சு வெச்சிருந்தயோ, அதால இப்போ உலகம் உன்னை அறிந்து கொண்டது அல்ஹம்துலில்லாஹ்!" என்று பெருமையுடன் சொன்னார்.

இன்று, அஸ்மா ஒரு புகழ்பெற்ற இஸ்லாமிய ஓவியராகத் திகழ்கிறாள் தைரியம் என்பது வெளியில் இருந்து வருவதில்லை, அது நம் ஈமானிலும் (நம்பிக்கை), நம் கனவுகளைப் பின்தொடரும் முயற்சியிலும்தான் இருக்கிறது என்பதை அவள் தனது வாழ்க்கையின் மூலம் உலகுக்கு உணர்த்தியவளாக திகழ்கின்றாள்.

கவிஞர் ரஸ்னா ரம்ஸான், அக்குறணை (இலங்கை)

## வாசிப்பனுவம்

**சிறுகதைகளின் சிறு உலகம்; இரஜகை நிலவன் எழுதிய 27 கதைகளின் பயணம்:**




இலக்கிய வளர்ச்சியின் நீண்ட வரலாற்றில் ’சிறுகதைகள்’ ஒரு சிறு குழநதை. அவற்றை எழுதுவதற்கு என்று ″முறைக் கையேடு″ எனப் பட்ட விதி எதுவும் இல்லையென்றாலும், சிறந்த சிறுகதைகள் சில அடிப்படை அம்சங்களின் மேல் அமைந்திருக்கின்றன—கதாபாத்திரம், கதைக்களம், சூழல், மோதல், மற்றும் கரு. இவை அனைத்தும் பொதுவாக ஒரு தெளிவான கட்டமைப்பில் அமைக்கப்படுகின்றன: தொடக்கம் (Exposition), நடுப்பு (Rising Action, Climax), மற்றும் முடிவு (Falling Action, Resolution). இந்தச் சிறியச் சூழலில், கதாபாத்திரத்தின் முக்கியமான உள்ளார்ந்த மாற்றத்தை வெளிப்படுத்தி, பொருள் நிறைந்த—பொதுவாக எதிர்பாராத—முடிவை உருவாக்க வேண்டும்.

இந்த 27 சிறுகதைகளைக் கொண்ட தொகுப்பில், ரஜகை நிலவன் ’சாதிக்க வேண்டும்’ என்று மனநிலை கொண்ட, ஆசை நிறைந்த, உணர்ச்சிகள் மிகந்த பல கதாபாத்திரங்களை உருவாக்குகிறார்; அவை வாசகர்களின் மனத்தில் நீண்டகாலம் பதியக் கூடியவை. சில கதைகள் மிகச் சிறியவை; நீளமான மோதல் அல்லது நிகழ்வுகளின் தொடரை உருவாக்க முடியாதபோதிலும், எழுத்தாளர் காட்டும் எழுத்து வண்ணம் வாசிப்பை ஈர்க்கும் வகையில் திகழ்கிறது.

இந்தக் கதைகள் பல்வேறு புவியியல் பின்னணிகளில் நிகழ்கின்றன—துபாய், ஷார்ஜா, உகாண்டா, மேலும் தமிழகத்தின் கிராம மற்றும் நகரப் பின்னணிகளிலும். ஒவ்வொரு கதையும் ஒரு தனித்த கரு மற்றும் அதற்குள் மறைந்துள்ள ஒரு முக்கியமான கருத்தை மையமாகக் கொண்டுள்ளன; இதில் வெளிப்புற மற்றும் உள்ளார்ந்த போராட்டங்களும் ஆழமாகப் பதிவாகின்றன.

கவிஞர் பிஷப் முனைவர் இரவிக்குமார் ஸ்றீஃபன்

சில கதாபாத்திரங்கள் _தன்னிறைவு_ என்ற கருத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்றன; சில கதைகள் அபாயகரமான சூழ்நிலைகளிலிருந்து மனிதர்களை விடுவிக்கும் நட்பின் சக்தியை வெளிப்படுத்துகின்றன—குறிப்பாக கடத்தல்காரரின் பிடியிலிருந்து. இரண்டு கதைகள் விளையாட்டு வீரர்களைப் பற்றி பேசுகின்றன; இதில் உடற்கல்வி ஆசிரியர்களும் பயிற்சியாளர்களும் தங்கள் தடகள வீரர்கள் இந்தியாவிற்கு பெருமை சேர்க்கும் வகையில் எடுக்கும் தனிபாபட்ட, தியாகத்தின் அடிப்படையிலான ஆபத்தான முடிவுகள் அழகாக சித்தரிக்கப்படுகின்றன.

என் கல்லூரிக் காலத்தில் எனது ஆங்கில பேராசிரியர் முனைவர் அருளாந்தம் அவர்கள் _"இலக்கியம் வாசகரைத் செம்மைப் படுத்துவதற்காகத்தான்"_ என்று அடிக்கடி கூறுவார். நிலவன் இந்த எண்ணத்தை உள்ளார்ந்த முறையில் ஏற்றுக்கொண்டுள்ளார். சில இடங்களில் அவர் நுணுக்கமான கற்றுதலையும் வழங்குகிறார். *'கானல் நீர்'* கதையில் அரசியல்வாதிகளுக்கு கையூட்டு கொடுக்க வேண்டாம் என்ற எச்சரிக்கை உள்ளது. மற்றொரு கதையில், தனது முகாமையாளர் நிறுவனப் பணத்தை எடுத்துவிட்டு ஓடிப்போனபின், வாடிக்கையாளர்களுக்கு சேர் வேண்டிய பணத்தைக் கொடுத்துவிட்டு மீண்டும் தன் நிதி நிறுவனத்தைத் தொடங்கத் தீர்மானிக்கும் நேர்மையான தொழிலதிபர் வருணிக்கப்படுகிறார். *'உன்னைத் தானே'* கதையில், திருமணத்தை ஏற்கும் முன் தங்கள் கடந்தகாலத்தைப் பற்றி இளைஞன்—இளம்பெண் பேசுவதின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகிறார். *'அழுக்கு'* கதையில், ஒரு மனிதரின் கைகள் அழுக்காக்காமல் இலாபம் கிடைக்காது என்ற நேரான உண்மையை எழுத்தாளர் வெளிப்படுத்துகிறார்.

ஒரு உருக்கமான கதையில், ஒரு தொழில்முறை செவிலியர் தன்னை விட்டு கைவிட்டு விலகிச் சென்ற மனிதனைப் கனிவோடு கவனிக்கிறார்; இந்தக் கதையின் உணர்வுப் பிணைப்பு இத்தொகுப்பின் தலைப்பாகவும் அமைந்துள்ளது.

இந்தக் கதைகளில் சமய வித்தியாசங்களும் இயல்பாக பின்னணியில் பின்னப்பட்டுள்ளன. காதலருடன் ஓடிச் செல்லும் பெண்ணுக்கு உதவிக்கரம் நீட்டும் இமயமலை இந்து சந்நியாசி ஒருவரும்; தான் விரும்பிய பெண்

## வாசிப்பனுவம்

_"நான் இயேசுவுக்கே திருமணம் ஆனவள்"_ என்று கூறிய பின், குருத்துவ சேவைக்கு சென்ற கத்தோலிக்க பாதிரியாரும்; செல்வம் தேடி வெளிநாட்டில் வேலை செய்யும் இஸ்லாமிய ஆண், தன் மனைவியோடு வாழ இந்தியா திரும்புபவர்களும் இங்கே தோன்றுகின்றனர்.

காதல் பல வடிவங்களில் இங்கே காணப்படுகிறது—ஒரு பணக்கார பெண் தன் ஏழை காதலன் பெரிய சாதனைகள் செய்வதற்காக தனது திருமணத்தைத் துறக்கிறாள்; இன்னொரு கதையில் ஏதோ 'அவள் மட்டுமே அறிந்த' காரணமாக, தனக்காக உயிரையையும் விடத் தூணிந்த காதலனோடு கொண்டிருந்த உறவை துண்டு சீட்டு செய்தி மூலமாக முடிக்கிறாள்; மற்றொரு கதையில், தன் மூத்த மாமாவைத் திருமணம் செய்ய ஆசைப்படும் ஒரு அக்காள் மகளின் காதல் 'கைக்கிளை' காதலாகத் தோன்றுகிறது.

நிலவன் பல வலிமையான பெண்களையும் உருவாக்குகிறார்—தன் காதலரின் தந்தையின் எதிர்ப்பை வென்று விரும்பியவரைத் திருமணம் செய்கிறாள்; பெற்றோரிடம் குறைந்த வரதட்சணையைப் பேச முடியாத தனது மாமாவின் மகனை நிராகரிக்கும் இன்னொரு பெண்; மேலும், எந்தத் தீமையும் இல்லாத ஆணொருவரால் வாழ்க்கையின் சுவையை அனுபவிக்க முடியாது என்ற நம்பிக்கையில், தீய பழக்கங்கள் இல்லாத ஆண் வேண்டாம் என்று கூறும் மற்றொரு பெண்.

*'கோபமும் கற்று மற'* கதையில், 1960-களில் கடுமையான முறையில் சில தொழிலக உரிமையாளர், தொழிலாளிகளின் நடந்து கொள்ளுவது போன்ற ஒருப் பெண்ணைக் காண்கிறோம். பின்னர் அவள் ஒரு பெண் புத்தராகவே தன்னை மாற்றிக் கொள்வது அழகாக சித்தரிக்கப்படுகிறது. *'மாலை நேரத்து மயக்கம்'* மற்றும் *'மரணம் கூட என்னைத் தீண்டாது'* கதைகளின் முடிவுகளில் எனக்கு உடன்பாடு இல்லை. மூன்றாம் பாலினத்தவர் அவர் பாணியில் உடை உடுத்த உரிமையும், எட்ஸ் நோயால் பாதிக்கப்பட்ட ஒருவர் சிகிச்சை செய்து காதலித்தவரை மணக்கவும் வழியுண்டு.

ஒரு நினைவில் நிற்கும் கதையாத் திகழும், *அசையும் காற்றில்*, முன்பு தவறாக நடந்து கொண்டதற்காக ஒரு வீட்டு பணிப் பெண்ணிடம் மன்னிப்பு

வாசிப்பனுவம்

அகர முதல இலக்கியப் பேரவை

கேட்கும் முதியவர் வருகிறார். உடல் பலவீனம் காரணமாகவும் மகனால் புறக்கணிக்கப்படுவதாலும், கனிவுடன் அவரைக் கவனித்துக் கொள்வதும் அதே வீட்டு பணிப் பெண்ணே! வாழ்வின் விளிம்பில் இருக்கும் அவரின் நிலையை, காற்றில் எந்த வேளையும் பறந்து செல்லத் கூடிய வாடிய தேக்கு இலை ஒன்றிற்கு ஒப்பிட்டு எழுத்தாளர் காட்டும் உருவகம் மிகச் சிறப்பானது.

இந்தக் கதைகளில் சிலவை முதலில் செய்தித்தாள்களில் வெளியானதால், வாசகர்கள் பழைய மற்றும் சமகாலப் பின்னணிகளின் மாறுபாட்டைக் காணலாம்.

167 பக்கங்களைக் கொண்ட இந்தப் புத்தகத்தை நான் ஒரே அமர்வில் முடித்தேன்—நிலவனின் கதை சொல்லும் நடை எவ்வளவு ஈர்க்கக்கூடியது என்பதை இது காட்டுகிறது.

தமிழ் இலக்கியத்திற்கு கவிஞர் ரஜகை நிலவன், புதியவரல்ல; ஏற்கெனவே பல சிறுகதைகளையும் புதினங்களையும் எழுதியுள்ளார். இந்தச் சிறுகதைகள் தொகுப்பு அவரது படைப்புலகத்திற்கு மேலும் ஒரு பொருள் மிகுந்த சேர்க்கை. சமூக மாற்றத்தை இலக்கியத்தின் மூலம் உருவாக்க அவர் எடுத்திருக்கும் முயற்சிகள் வெற்றி பெற என் மனமார்ந்த வாழ்த்துகள்.

## முன்னுரை



தமிழ் மொழியின் தூய்மையைக் காக்கவும், பிறமொழிச் சொற்களின் கலப்பின்றி தமிழை வளர்க்கவும் பாடுபட்டவர் மறைமலை அடிகள். பன்மொழிப் புலமை பெற்ற இவர், இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தமிழ் இலக்கிய உலகில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியவர்.

## பிறப்பும் கல்வியும்

மறைமலை அடிகள் 1876-ஆம் ஆண்டு ஜூலை 15-ஆம் நாள் நாகப்பட்டினம் மாவட்டத்தில் உள்ள காடாம்பாடி என்னும் ஊரில் பிறந்தார். இவருக்குப் பெற்றோர் இட்ட பெயர் வேதாசலம். இவர் தமிழறிஞர் நாராயணசாமிப் பிள்ளையிடம் தமிழ் கற்றார். சைவ சித்தாந்தத்திலும், ஆங்கிலத்திலும் ஆழ்ந்த புலமை பெற்றிருந்தார்.

## தனித்தமிழ் இயக்கம்

அக்காலத்தில் தமிழில் வடமொழிச் சொற்கள் பெருமளவில் கலந்து எழுதப்பட்டன. இதனை மாற்ற விரும்பிய அடிகள், 1916-ஆம் ஆண்டு "தனித்தமிழ் இயக்கத்தை"த் தொடங்கினார்.

தனது பெயரான வேதாசலம் என்பதைத் தூய தமிழில் மறைமலை என்று மாற்றிக்கொண்டார்.

அவர் நடத்தி வந்த 'ஞானசாகரம்' இதழை 'அறிவுக்கடல்' எனப் பெயர் மாற்றினார்.

தன்னுடைய பிள்ளைகளுக்கும் தூய தமிழில் பெயர் சூட்டினார்.

**இலக்கியப் பணிகள்**

மறைமலை அடிகள் 50-க்கும் மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார். அவற்றுள் சில முக்கியமானவை:




- பட்டினப்பாலை ஆராய்ச்சி உரை
- முல்லைப்பாட்டு ஆராய்ச்சி உரை
- சித்தாந்த விந்து
- குமுதவல்லி (புதினம்)
- சாகுந்தல நாடகம்

இவரது உரைநடை நடை மிகவும் தெளிவானது மற்றும் ஆழமானது. மாணிக்கவாசகர் மற்றும் திருவாசகம் பற்றிய இவரது ஆய்வுகள் உலகப் புகழ் பெற்றவை.

**சமயப் பணி**

இவர் சைவ சமயத்தின் மீது மிகுந்த பற்று கொண்டவர். 'சைவ சித்தாந்த மகா சமாஜம்' என்ற அமைப்பை நிறுவி, அதன் மூலம் சைவ நெறிகளையும் தமிழையும் ஒன்றாக வளர்த்தார். அதே சமயம், பகுத்தறிவுச் சிந்தனைகளையும் தமிழ்ப் பண்பாட்டையும் போற்றினார்.

**முடிவுரை**

"தமிழ் தமிழ்நாட்டவருக்கே" என்ற உணர்வை மக்களிடையே விதைத்தவர் மறைமலை அடிகள். இன்று நாம் தூய தமிழில் பேசுவதற்கும் எழுதுவதற்கும் அடித்தளம் அமைத்துக் கொடுத்தவர் அவரே. 1950-ஆம் ஆண்டு செப்டம்பர் 15-ஆம் நாள் அவர் மறைந்தாலும், அவரது தனித்தமிழ் உணர்வு இன்றும் தமிழ் நெஞ்சங்களில் வாழ்ந்து கொண்டிருக்கிறது.

திரு அ.வில்சன், இதழாசிரியர்

# நாளை நமதே

## புத்தகம் என்பது

## தொட்டுப்பார்த்தால்

## வெறும் காகிதம்

## தொடர்ந்து படித்தால்

## அதுவே பேராயுதம்

அகமும் தமிழே முதலும் தமிழே

"தனித்தியங்கும் தன்மை தமிழினுக் குண்டு
தமிழே ஞாலத்தில் தாய்மொழி பண்டு
கனிச்சாறு போற்பல நூலெலாம் கண்டு
காத்ததும் அளித்ததும் தமிழ்செய்த தொண்டு"

என்றும் தலைப்பணியாம் தமிழ்ப்பணியில,

அகர முதல செய்திக்குழு அகர முதல இலக்கியப் பேரவை
அகர முதல கல்விக்குழு சிவம் அறக்கட்டளை

தொடர்பிற்கு :

9597887847
8870884969



# அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com